MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# கானகன் புதினத்தில் பளியர் வாழ்வியல்

**ரா.பவித்ரா**

முனைவர் பட்டஆய்வாளர் (முழு நேரம்),

தமிழ் உயராய்வுத்துறை,

அரசுகலைக்கல்லூரி (தன்னாட்சி),

கோயம்புத்தூர் 641 018.

மின்னஞ்சல்: rpavithra0012Shgmail.com

அலைபேசி: 8754989233

நெறியாளர்

**முனைவர்.ந.மகாலட்சுமி**

இணைப்பேராசிரியர்,

தமிழ் உயராய்வுத்துறை,

அரசுகலைக்கல்லூரி(தன்னாட்சி),

அலைபேசி: 9842972689

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

# The life of the Palayans in the Kanagan novel

PAVITHRA. R

PHD (FULL TIME) TAMIL

GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS)

COIMBATORE_641018

rpavithra0012@gmail.com

GUIDE

**DR.N.MAHALAKSHMI**

ASSISTANT PROFESSOR

DEPARTMENT OF TAMIL

GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS)

COIMBATORE _641018

ABSTRACT :

The novel Kanagan talks about tiger hunting, tribal people, and a living environment where many lives are embedded, but now, in the name of civilization, man has started living selfishly.The livelihood of the ancient tribes living in these areas is also questionable. There are 37 types of ancient tribes. Only the tribal people of Tamil Nadu, the Paliyars, can be seen in this novel as a thread connecting the Paliyars and the mountain people. This paper discusses the lifestyle of the Paliyars and their lifestyles, food, clothing and occupations, their main occupation is hunting, the progress made in their customs, and the reasons for their current Paliyar names. The history of Kannagi in Sangam literature also provides a connection to the Silappadhikaram and provides food for thought. The purpose of this article is to examine the lifestyle of the Palyas in the Kanaka novel, including their hunting methods and raising livestock.

**ஆய்வுச் சுருக்கம்**

கானகன் புதினத்தில் புலி வேட்டையைப் பற்றியும்இ பழங்குடியினர் இனம், மற்றும் பல உயிர்கள் பொதிந்திருக்கும் ஓர் உயிர்ச் சூழல் ஆனால் தற்போதைய காலகட்டத்தில் நாகரீகவளர்ச்சி என்ற பெயரில் மனிதன் சுயநலத்துடன் வாழ ஆரம்பித்துவிட்டான்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

இவ்வனங்களில் வாழும் தொன்மை வாய்ந்த பழங்குடிகளின் வாழ்க்கை ஆதாரமும் கேள்விக்குறியாக உள்ளது. தொன்மை வாய்ந்த பழங்குடிகளின் வகைகள் 37 - வகையாக உள்ளனர். தமிழகத்தில் வாழும் பழங்குடிகள் பளியர்கள் மட்டுமே பளியர்களுக்கும் மலைப்பொடவிற்குமான அணுக்கத்தை இப்புதினத்தில் இழையோடக் காண முடிகிறது.

இப்புதினத்தில் பளியர்களின் வாழ்வியல் மற்றும் அம்மக்களின் வாழ்க்கை முறைகள் உணவு, உடை மற்றும் தொழில் முறைகள் அவர்களின் முக்கியத் தொழில் வேட்டையாடுதல், பழக்கவழக்கங்களில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றியும் அவர்களின் தற்போதைய பளியர்கள் பெயர்க்காரணங்கள் சங்க இலக்கியத்தில் வருகின்ற கண்ணகியின் வரலாறும் சிலப்பதிகாரத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி சிந்தனைக்கு விருந்து அளிக்கின்றனர். அவர்கள் விலங்குகளை வேட்டையாடும் முறை, கால்நடைகளை வளர்த்தல்; போன்றவற்றை வாழ்வியல் கானகன் புதினத்தில் பளியர்கள் வாழ்வியல் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழகத்தில் வாழும் 37- பழங்குடிகள் மக்களின் மலைப்பொழிவுகளில் வாழும் பழங்குடிகள் பளியர்கள் மட்டுமே. பளியர்களுக்கு மலை பொடவிருக்குமான அணுக்கத்தை இப்புதினத்தில் இழையோடக் காணலாம். மனிதகுலம் இன்று வரை பல்வேறு இனங்களாகவும், சமூகங்களாகவும் வேறுபட்டு காணப்படுகின்றன. இதில் மிகத் தொன்மையாக விளங்குபவர்கள் இவர்களின் சமூகங்களும் பண்பாடுகளும் காலமாற்றத்தால் மறைந்தும், அழிந்தும் வருகின்றனர். மக்கள் தென்னிந்திய பகுதிகளில் வசிக்கிறார்கள். இவர்கள் இன்றும் காட்டில் வேட்டையாடிப் பல்வேறு காட்டுப் பொருட்களை சேகரித்து வாழக்கூடிய ஆதி குடியினராக வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டிலும் தொன்மை பழங்குடியினராக பெரும்பாலான இடங்களில் கண்டறியப்பட்டுள்ள தொதவர, கோத்திரம், குறும்பர், இருளர், பளியர், காட்டுநாய்க்கர் எனப் பழங்குடிகள் இம்மக்கள் மலைகளிலும் காடுகளிலும் வாழ்க்கையை பயணிக்கிறார்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

தம் தொழில் முறைகள் மற்றும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் வழிபாட்டுமுறைகள், சடங்குகள், பொழுதுபோக்குகள், மக்கள் காடுகளில் வசித்து அவர்களுக்காக தேவைகளை அவர்களே வாழ்ந்து உணவுமுறைகளை பற்றியும் காடுகளின் கிடைக்கின்ற பொருட்களை வைத்து மட்டும் இல்லாமல் தற்போதைய நிலையில் அம்மக்களின் நிலைமாற்றி இருப்பதையும் அம்மக்கள் வாழ்க்கையை வாழ்ந்துவருவதே கானகன் புதினத்தில் வாழ்வியல் முறையை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பளியர்களின் வாழ்விடம்**

பழங்குடியினங்களில் ஒருவகையான இனம் இந்தப் பளியர். இப்பளியர் தமிழகத்தில் தென்மாவட்டங்களில் உள்ள காடுகளில் வாழும் பழங்குடிமக்களின் வாழ்க்கைமுறை வருசநாட்டு பள்ளத்தாக்கிலும், ஏலக்காய் மலைகளிலும் காடுகளுக்கிடையே வாழ்கின்றனர். மக்கள் வாழ்கின்ற குடிசைகளை ஈத்தை புல்லால் செய்யப்பட்ட குடிசை மரங்களின் மேல் மேடைகள் அமைத்தும் பாறைகள் குகைகளின் அடிப்பகுதியாக இடங்களை மையமாகத் தற்காலிகமாக தங்கியும் வாழ்பவர்கள் இம்மக்கள் எளிய வாழ்க்கையை உடையவர்கள். பளியர் மக்கள் என்பதை அறியமுடிகிறது.

இம்மக்கள் பளியர் சமூகத்தில் ஆண்களைக் காட்டிலும் பெண்களைப் பொருளாதார சுதந்திரம் பெற்றவர்களாகவும், குடும்பத் தேவைகளை நிறைவேற்றுபவர்களாகவும் உள்ளனர். இவர் தம் சமூகத்தில் ஆண் பெண் என பாராட்டப்படுவதில்லை.

“**பளியங்குடி பொம்பளைதான் இந்தகாட்டில் பலம் ஜீவன் எத்தனை பதட்டத்திலும் செய்ய வேண்டியகாரியங்களை கவனமாக செய்கிறவர்கள்**” **- (கானகன், ப. 31)**

அவர்களின் விவசாய துணைசார்ந்தும் வேட்டையாடியும், வேளாண்மை, மீன்பிடித்தல் காடுகளில் பொருட்கள் சேகரிப்பு ஆகிய பணிகளில் பெண்களின் பங்கு அளப்பரியதாக உள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

என்பதை,

"**பளிச்சிநளனச்சஆப் பெரும் சாயும்**

**பளிச்சிபெத்தாபடெசேரும்**

**பளிச்சிபூத்துகொண்டேசாயும்**

**பளிச்சியெப்பத்தாபாம்பும் ஒண்டும்**

**பளிச்சி கை பட்டுகண்ணாடி**"

**-(பண்பாட்டுஆய்வியல், கானகன்.237)**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது. சமூகத்தையும் குடும்பத்தையும் வழிநடத்தி செல்வதற்கான முன்னோடியாக பளியர் குடிப்பெண்கள் மிகவும் சமூகத்தில் பெரும் பங்குவகுத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

## தொழில் முறைகள்

பழங்குடியினர் என்றாலே அவர்கள் மட்டுமே வேட்டையாடி சேகரிப்பவர்கள் என்று எல்லாம் கருதமுடியாது. வேட்டையாடி சேகரித்தலை ஒருபகுதியாக கொண்டு இவ்வாறு தமிழகத்தில் பழங்குடிகளின் உணவு உற்பத்தி செய்யும் பழங்குடியினராக காணப்படுகின்றனர். மேற்குதொடர்ச்சி மலைப் பகுதிகளில் வாழும் பல்வேறு பழங்குடியினர்களின் வாழ்வுமுறை வேட்டையாடுதல், உணவுசேகரித்தல், புன்செய் பயிரிடுதல், காப்பி தேயிலை தோட்டங்களில் வேலை பொருளாதாரம் முறையில் ஆண்கள் விலங்கின் பொருளாதாரத்தையும் மற்றும் பெண்கள் தாவரவகை பொருளாதாரத்தையும் ஈட்டுகின்றன.

"**நெல்,திணை,வாழை என ஏராளமாய் விளைந்து**
**தயாராயிருத்தல் கூடியவிரைவில்**
**எல்லோரும் அறுவடை செய்துவிட நினைத்தார்கள்**
**வழக்கமாக ஒரு விவசாயி 390 கிலோ நெல்லைச் சாகுபடி செய்ய**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**நாற்று நடவேண்டுமானால் இதை இரு மடங்காக்கி விதைக்கவேண்டும்**”

**- (கானகன், ப.67)**

**பிறப்புச் சடங்குமுறைகள்**

தமிழகத்தில் இன்னும் தொன்மை மிக்க பலர் பழங்குடியினராக உள்ளார்கள் இவர்கள் பழங்காலமாக மலைகளிலும் காடுகளிலும் சமவெளிகளிலும் தனித்தொதுங்கி வாழ்ந்து வருகின்றனர். எனப் பலவகை இனங்களைக் காணமுடிகிறது.

“**குழந்தை பிறப்பதற்கு மூலிகை மருத்துவமுறைகளை கையாளுகின்றனர் குழந்தையின் பிறப்புகணவன் வீட்டிலேயே நிகழ்கிறது . குழந்தையை பிரசவிக்கும் பளிச்சு அவளாகவேதான் பிரசவம் பார்த்துக் கொள்ளவேண்டும். மூன்றுநாட்களுக்கு யாரும் அவளையும் அவள் பிள்ளையையும் தொடமாட்டார்கள் குழந்தையின் தொப்புள் கொடிஅரிக்கிறவள் அந்தகுழந்தையை முதலில் காட்டுவது இந்தகாட்டிற்குதான்**”

**(கானகன், ப.88)**

இக்கருத்தின் வாயிலாக பளியர் இனப்பெண் குழந்தையை முதலாவதாக காற்றுக்கு காட்டும் நிகழ்வு மக்கள் காடுகளைத் தெய்வமாக வணங்கியும் மதித்தும் வாழ்கின்ற முறையை காட்டுகிறார்கள்.

**இடம் பெயர்தல்**

மனிதன் எங்கு வேண்டுமானாலும் வாழும் உரிமையை பெற்றுள்ளான் என்பதை அறியமுடிகிறது. காடுகள் மலைப்பகுதிகளிலும் வாழும் பளியர் மக்கள் தங்கள் இனத்தோடு தனிப்பட்ட முறையில் வாழ்க்கை நடத்தினாலும் எவரேனும் குடும்பத்திற்கு இடமாறும் சூழல் உள்ளது

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**“தனிமனிதனோ சிறு கூட்டம் ஒன்றோதம் இருப்பிடத்தை நிலையான ஓரிடத்திலிருந்து இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாற்று செல்வதை இடம்பெயர்தல் என்பர்.”**

**- (வேட்டை, ப.58)**

மக்கள் சமவெளிகளிலும் குடிசை அமைத்தும், பாறைகளின் இடுக்குகளிலும் குகைகளில் ஆடியிலும் வாழ்க்கை முறையை வாழ்ந்து வந்தார்கள்.

மக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளில் தங்கள் குடிசைகளை நிலையான இடத்திற்கு மாற்றி அமைத்துக் கொண்டு கடினமான செயல் இருப்பினும் பளியர் இன மக்கள் முன்கூட்டியே வேலையை செய்து முடிக்கிறார்கள்.

**முடிவுரை**

கானகன் புதினத்தில் கதைப்போக்கானது பளியர் இன மக்களுக்கு இடையே உள்ள நெருக்கத்தையும், உறவினையும் அவை எதிர்கொள்கின்ற சிக்கல்களையும் எடுத்துரைத்தலும் சமூக மக்களிடம் உள்ள விழிப்புணர்வையும் பழங்குடியினர் என்றாலே அவர்கள் மட்டுமே வேட்டையாடி சேகரிப்பவர்கள் என்றும், தனக்கான பொருள்களை அவர்களே தேடிக் கொள்பவர்கள் என்றும், மக்கள் ஆண் பெண் என இல்லாமல் பொருளாதார சுதந்திரம் பெற்றவர்களாகவும், குடும்பத் தேவைகளை நிறைவேற்றுபவர்களாகவும் உள்ளனர். மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் வாழும் பல்வேறு பழங்குடிகளின் வாழ்வுமுறை வேட்டையாடுதல் உணவுசேகரித்தல் போன்ற உடையவர்கள் பளியர் குடிகள். மனிதன் எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் உரிமை பெற்று வாழலாம் என்பதை இம்மக்களின் வழி காணமுடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**பார்வை நூல்கள்**

1.கானகம், மலைச்சொல் பதிப்பகம் ஜெ.எம்.சேட்மெமோரியல் டிரஸ்ட் காபௌண்ட், ஊட்டி, நீலகிரி – 643001.

2.பண்பாட்டு ஆய்வியல், (பண்பாட்டியல் குறித்த முழுதளவிய பார்வை) பாரதி புத்தகாலயம் சென்னை – 600 018.

3.வேட்டை, எழுத்து பதிப்பகம் எண் 75 - மற்றும்76 - முதல் தளம் கருப்புசாமி கவுண்டர் வீதி, பாலாஜி நகர், சென்னை - 600050